மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருச்செந்தூர்
முன்னிலை:– செல்வி.பத்மபிரியா.K, B.A., B.L., (Hons)
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருச்செந்தூர்.
2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை
<u>அசல் வழக்கு எண். 43/2024</u>

பிரான்சிஸ் பென்சிகர் ..... வாதி

/ எதிர் /

1.பெல்லார்மின் சாந்தக்குமார்

2. அன்பரசி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 09.07.2026 இன்று விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.H.ஜார்ஜ் வாசகன், அவர்கள் முன்னிலையாகியும், 1 ஆவது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கணேசன், அவர்கள் முன்னிலையாகியும், 2 ஆம் பிரதிவாதி தாவா வழக்கை ஆட்சேபணை செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், எந்தவிதமான மேல்நடவடிக்கையும் எடுக்காமல் தாவா வழக்கை ஒத்துக்கொண்டு ஒருதரப்பாக உள்ளதாலும், வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதி தரப்பில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி சமாதான மனு அனுமதிக்கப்பட்ட நிலையில், மேற்படி சமாதான மனுவின் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் கட்டளையிட்டு பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது பிராது 2 ஆம் தபசில் சொத்து உபய வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுப்பாதை என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக 1 ஆம் பிரதிவாதி பொதுப்பாதை கூட்டு அனுபவத்திற்கு எதிராக செயல்பட்டு, எந்தவிதமான இடையூறும் கூட்டு அனுபவத்திற்கு ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும் படிக்கும், பிராது 2 ஆம் தபசில்

PADMAPRIYA K
Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.09 13:09:19 +0530

சொத்தில் 1 ஆம் பிரதிவாதி அத்துமீறி பிரவேசித்து எந்தவிதமான கட்டுமானமும் கட்டக்கூடாது என தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்கும் படிக்கும், பிராது 3 ஆம் தபசில் சொத்து வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பொது முடுக்கு என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக 1 ஆம் பிரதிவாதி பொது முடுக்கு கூட்டு அனுபவத்திற்கு எதிராக செயல்பட்டு, எந்தவிதமான இடையூறும் கூட்டு அனுபவத்திற்கு ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும் படிக்கும், இந்த வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும், மற்றும் இந்த வழக்கின் தன்மையை அனுசரித்து இந்நீதிமன்றத்திற்கு தோன்றுகின்ற இதர நியாயமான பரிகாரங்களையும் வாதிக்கு கிடைக்கும்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(i) The plaintiff and the 1st defendant are present before this Court. Both the counsels for the Plaintiff and the 1st defendant also present. D2 already Exparte in this Suit.

(ii) The plaintiff and the 1st defendant have filed a joint Compromise memo, duly signed by both parties and their counsels and the terms of compromise are agreed by them and it is recorded.

(iii) It is further Stated by the Plaintiff in IA No. 4/2026 that No relief has been claimed against 2nd defendant and asserted that the compromise arrived at between the plaintiff and the 1st defendant will not prejudice the rights of the 2nd defendant.

(iv) Therefore, in pursuance of the order passed in. IA No.4/2026 and in view of the terms of compromise entered between the Plaintiff and the 1st defendant, this Suit is disposed of in term of joint compromise memo. The Compromise memo Shall form Part of this judgment and decree of this court.

PADMAPRIYA K
Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.09 13:09:27 +0530

(v) Accordingly, this Suit is disposed as Compromised between the plaintiff and 1st defendant.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09 ஆம் நாள் வியாழக்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PADMAPRIYA K

Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.09 13:09:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருச்செந்தூர்.

வாதி தரப்பு சாட்சி – பிரான்சிஸ் பென்சிகர் (வாதி)

வாதி தரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 14.03.1984 தேதியிட்ட லாசர் நாடார் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.08.2006 தேதியிட்ட வாதி பெயருக்கு சலஸ்டின் ரத்தினக்குமார் என்பவர் பிறப்பித்து கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 20.12.2005 தேதியிட்ட லாசர் நாடார், அனிதா அம்மாள் என்பவருக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக இணையதள வழி சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 20.12.2005 தேதியிட்ட லாசர் நாடார், ரத்தினக்குமார் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவாளர் அலுவலக இணையதள வழி சான்றிட்ட நகல் |
| நீ.ம.சா.ஆ.1 | ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் |

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:– இல்லை

PADMAPRIYA K

Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.09 13:09:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருச்செந்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
திருச்செந்தூர்.
அ.வ.எண்.43/2024
நேரிய/வரைவுதீர்ப்புரை
நாள் 09.07.2026.